முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் முனையடுவார் நாயனார் அருளிய ஒளி சூட்சும ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

05.01.2019, சனிக்கிழமை

1. **தவசக்தி கொண்டு கலியுகத்தை**
**தருமயுகமாக்க வந்த அண்ணலே**
**அவதாரமாக வந்த அரங்கனே**
**அகிலமதில் உன் பெருமை கூறி**

2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி சிலை திங்கள்**
**தெரியவே மூவேழு திகதி காரி வாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 21ம் நாள் 05.01.2019, சனிக்கிழமை)**
**தேசிகனுக்கு முனையடுவார் நாயனார் யானும்**

3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான ஞானபலம் அடைய
ஆணும் பெண்ணுமான இருபாலரும்
அரங்க ஞானி தரிசனம் பெற வேண்டும்

4. வேண்டியே ஞானிகளை எண்ணி
விடா முயற்சியாக தொடர் நோக்கம்
கொண்டுமே தளரா இயங்க வேண்டும்
குடும்ப கடமைகள் ஜீவனமென

5. என தொடர்பு வழி இருந்தாலும்
எப்போதும் ஞானிகளுடன் கூடிய
ஞான சிந்தையை விட்டு அகலா
நாளும் பூஜித்து வருவதுடன்

6. வருவதுடன் குருமார்க்கம் சொல்லும்
வார்த்தைகளை வேதங்களாக
முருகா அரங்கா என நாளும்நாளும்
முழுமைபட உற்று நோக்கி வர

7. வருகவே நிலைகள் உயரும்
வல்லமை மிக்க ஞானிகளே
மாறுதலும் உங்கள் நிலையாக
மண்ணுலகில் அடைய வேண்டும்

8. வேண்டும் வேண்டும் என சிந்தையை
வேலவன் ஞானியர்கள் மேல் வைக்க
தொண்டென தொடர் முயற்சியோடு
தேசிகனார் தருமவழிகளை தொடர

9. தொடர தொடரவே உங்களை நோக்கி
தேசிகனார் ஞானியர்கள் பலரும்
தடையற சக்தியாக வந்து நன்கு
தவம் செய்த பூரண பலனாக

10. ஆகவே ஆதார சக்கரங்களை
ஆற்றல்பட இயக்கி தடையற
மகான்கள் அடைந்த தசவாசல்
மகா வழி திறந்து மெய்ஞானமுற

11. ஞானமுற ஞானவாழ்வினை தந்து
ஞானிகளாகும் வாய்ப்பு நல்குவர்
தானதருமமுடன் தொடர் முயற்சி
தரணியோரே செய்ய யுகமே மாறும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் முனையடுவார் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

பலபல ஜென்மங்களாய் செய்திட்ட தவத்தின் பலன்களையெல்லாம் ஒன்றாக்கி தர்மபலமாக்கி கலியுகத்தினை தருமயுகமாக ஆக்கிடவே முருகப்பெருமானிடத்து வரங்களாய் பெற்று முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 21ம் நாள் 05.01.2019, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே முனையடுவார் நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் முனையடுவார் நாயனார்.

உயர்வான ஞானத்தின் பலத்தை அடைந்திட வேண்டுமாயின் ஆண்களும் பெண்களும் என இருபாலரும் ஞானம் அளிக்கும் கலியுக ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தரிசனம்தனை பெற வேண்டும்.

அரங்கமகா தேசிகனாரின் தரிசனம் பெற்று அரங்கனின் திருவடி வணங்கி ஆசிகளைப் பெற்று முற்றுப்பெற்ற மகான்களான ஞானிகளை எண்ணி தளராது விடாமுயற்சியாக ஞானம்தனை பெற வேண்டும் என்றே தொடர்ந்து பூஜைகள் செய்தும், தொண்டுகள் செய்தும் செயல்பட வேண்டும்.

குடும்பத்தில் இருந்திட்ட போதிலும் அவரவர்க்கு உண்டான இல்லற கடமைகளை செய்திட்டாலும், குடும்பத்தினை காத்திட வேண்டி குடும்ப ஜீவன வகையில் சென்று பாடுபட்டாலும் எப்போதும் ஞானிகளின் தொடர்புடன் அந்தரங்கத்தில் ஞானிகளை இறுகப் பற்றிக் கொண்டு விடாமல் ஞான சிந்தையிலிருந்து அகலாமல் தினம்தினம் பூஜைகளை செய்து வருவதுடன் குருமார்க்கம் வாயிலாக குருநாதன் ஆறுமுக அரங்கன் மூலம் பெறும் உபதேசங்களை, வார்த்தைகளை, கட்டளைகளை வேதங்களாக எடுத்துக் கொண்டு சிரம் தாழ்த்தி பணிந்து ஏற்று "முருகா அரங்கா" என மனம் உருகி நாள்நாளும் முழுமைபட அரங்கனின் சொல், செயல் கடமைகளை கட்டளைகளை உற்று நோக்கி பிறழாது கடைப்பிடித்து வர வேண்டும்.

இவ்விதமே அரங்கமகானின் ஒருசொல்லும் மீறாது நடந்து வர, வருகின்றோரின் நிலை உயரும். வல்லமைமிக்க ஞானிகளே இப்பாவியேன் மாற்றம் அடைந்து நீங்கள் பெற்ற பேரின்ப நிலையை அடியேனும் பெற்றிட வேண்டும். அதுவே யான் பெறும் நிலை என, நீங்கள் அடைந்த நிலையை நானும் அடைந்திட வேண்டுமென்றே திடசித்த வைராக்கியத்துடன் பாடுபடுவதுடன்

உங்கள் நிலை எமக்கும் வேண்டும் வேண்டும் என தளராது சிந்தையை ஞானத்தலைவன் முருகப்பெருமான் மீதும் ஞானியர்கள் மீதும் வைத்து மறவாது பணிந்து பயபக்தியுடன் பூஜிப்பதுடன் தொடர்ந்து தொண்டுகளைச் செய்து உலக உயிர்களை மகிழ்விப்பதுடன் தொடர்முயற்சிகளை கைவிடாது தொடர்ந்து தொடர்ந்து இடைவிடாது நொடிப்போதும் வீண் செய்யாது இறைவன் திருவடியை அடைவதே குறிக்கோளாய் கொண்டு அவரவரால் இயன்ற தர்மங்களை செய்து வர வேண்டும்.

இவ்விதம் பூஜைகளையும், தொண்டுகளையும், தர்மத்தையும் தொடர்ந்து செய்து வரவர, உங்களது தொடர் முயற்சிக்கு உண்மை ஞான சற்குருநாதன் தேசிகனார் முதல் ஞானியர் பலரும் மனம் இரங்கி அருள் செய்து தடையேதும் இன்றி ஏற்றுக் கொண்டு உங்களுள் அருள் சக்தியாக வந்து அருள் செய்து, நன்கு தவம் செய்திட்டதனால் வருகின்ற பலனை போல பூரண தவபலத்தினை உங்களுக்கு அருளுவார்கள்.

ஞானிகள் அருளிய பூரண தவபலனின் பயனால் ஆறு ஆதார சக்கரங்களையும் ஆற்றல்பட இயக்கி தடையேதும் இன்றி மகான்களெல்லாம் கடுந்தவம் செய்து உடம்பினை வருத்தி பாடுபட்டு அடைந்திட்ட தசவாசலை அடைந்திட உதவி செய்தும், தவவாசல் எனும் மகா வழியினை திறந்து மெய்ஞானமுற ஞானவாழ்வினை உங்களுக்கு பெருந்தாய் பெருங்கருணையுடன் உங்களுக்கு அருளி ஞானிகளாகும் நல்வாய்ப்பினை அருள் செய்து மகிழ்வார்கள்.

**உலக மக்களெல்லாம் தானதருமங்களுடன் தொடர்ந்து முயற்சி செய்திட்டால் இந்த யுகமே மாற்றமடைந்து துன்பமற்ற இன்பமயமான ஞானயுகமாக இவ்வுலகம் மாறிடும்** என தமது ஒளி சூட்சும நூல் மூலம் ஞானம் அடையவும் ஞானயுகம் உருவாகவும் வழிவகை உரைக்கின்றார் மகான் முனையடுவார் நாயனார்.

–சுபம்–